**நாடார் மகாஜன சங்கம்**

**சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி-மதுரை -12**

**தமிழ்த்துறை-முத்தமிழ் மன்றம்**

**உலகத் தமிழ் சங்கம் –தமிழ்க்கூடல் -174 வது நிகழ்வு**

**தேதி: 21.08.2025**

**முன்னிலையுரை :**

**திருமதி.மோ.கவிதா,**
**கல்லூரி முதல்வர்**
**சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி.**

**வாழ்த்துரை:**

**முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா**
**உலகத்தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் மற்றும் இயக்குநர்**
**உலகத் தமிழ் சங்கம் - மதுரை**

# INVITATION




உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, தமிழ்த்துறை, மதுரை
இணைந்து நடத்தும்
தமிழ்க்கூடல் - 174
முன்னிலையுரை
திருமதி மோ. கவிதா அவர்கள்
முதல்வர் (பொ), சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை
தமிழ்க்கூடலுரை
நானும் பாவனை விஞ்ஞானக் கதைகளும்
எழுத்தாளர் ஆர்னிகா நாசர் அவர்கள்
கோயம்புத்தூர்
21.08.2025 (வியாழன்)
முற்பகல் 10.30 மணி
சங்கப் புலவர்கள் கூட்ட அரங்கம்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
அழைப்பின் மகிழ்வில்
முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள்
துணைத்தலைவர்/இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# PHOTO






தமிழ்க்கூடல்
GPS Map Camera
Madurai, Tamil Nadu, भारत
103, Mellur, Madurai, Tamil Nadu 625002, भारत
Lat 9.932325° Long 78.13847°

PAPER NEWS




மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும், சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்திய 174வது 'தமிழ்க்கூடல்' நிகழ்ச்சி உலகத்தமிழ்ச்சங்கப் பெருந்திட்ட வளாகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வறிஞர் முனைவர் க.சோமசுந்தரி வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா தலைமை தாங்கி கூறுகையில் சாதாரணமாகக் கதைகள் ஏன் முக்கியம் என்றால் மனித மனங்களை மலரவைக்கும் ஆயுதம், நாம் கதைகளால் உருவானவர்கள், நம் பாட்டி கதை சொன்னால் நிலாவை, நட்சத்திரங்களைக் காட்டி கதை சொல்லும்போது சட்டையில் நிலவை, நட்சத்திரங்களை வைத்துக்கொண்டு தூங்குவோம், காலையில்



னைகள்தான் விஞ்ஞானமாக மாறி விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்குக் காரணமாகும் என்றும் அறிவுப்பூர்வமான எழுத்துக்களை வாசியுங்கள் குழந்தைகளே! என்று தனது தலைமையுரையில் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியின் முதல்வர்(பொ) மோ.கவிதா முன்னிலை வகித்தார்.

கோயம்புத்தூர் எழுத்தாளர் ஆர்னிகாநாசர் 'நானும் பாவனை விஞ்ஞானக்கதைகளும்' எனும் தலைப்பில் தமிழ்க்

ரம், சகமனிதர்களின் வாழ்க்கையை மறைந்திருந்து பார்க்க உதவும் உப்பரிகை ஜன்னல், எழுத்தாளத் தேனீக்களின் ஒரு தேக்கரண்டி கொம்புத்தேன், சமூகத்தின் அன்றாட செயல்பாடுகளைக் காட்டும் மாயக்கண்ணாடி, விரும்பிய ஒரே கதாபாத்திரத்துக்காக வாதாடும் வழக்கறிஞன், கவிதையின் பெரியப்பா மகன், போன்சாய் குற்றால நீர்வீழ்ச்சி, தாய்ப்பால் கலந்த உமிழ்நீருடன் கைக்குழந்தை கொடுக்கும் முக்கம் என்றும்

இலக்கை அடையும் சூத்திரம் பாவனை விஞ்ஞானக் கதைகளில் ஒளிந்து இருக்கின்றன கடவுளுக்கே புதிய படைப்பியல் ரகசியங்களைக் கற்றுத் தருகின்றன பாவனை விஞ்ஞானக் கதைகள் என்றும் சாத்தியம் இல்லாததை சாத்தியமாக்கும் எழுத்துத் தவம் பாவனை விஞ்ஞானக் கதைகள் என்றும் கற்பனைகள் மனித குலத்தை உச்சம் சேர்க்கும் மின்படிக்கட்டு, தொடர்ந்து பறக்க கற்பனை செய்து இரு இறக்கைகள் பெறுவோம் நண்பர்களே! என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வு வளமையர் முனைவர் ஜ.ஜான்சிராணி நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சிக்குத் தமிழறிஞர்கள், சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், அல் அமீன் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்

விவசாயிகள் குறைதீர்
• மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டம்: கலெக்டர் அலுவலக வளாகம், மதுரை, தலைமை: கலெக்டர் பிரவீன்குமார், காலை 10:00 மணி.
• தமிழ் கூடல்: 'நானும் பாவனை விஞ்ஞான கதைகளும்' : நிகழ்த்துபவர் – எழுத்தாளர் ஆர்னிகா நாசர், உலக தமிழ்ச்சங்கம், மதுரை, தலைமை: சங்க இயக்குநர் பர்வீன் சுல்தானா, முன்னிலை: சேர்மத்தாய் வாசன் கல்லூரி முதல்வர் கவிதா காலை 10:30 மணி.
• ஹிந்தி மொழி பேச்சுப்பயிற்சி சான்றிதழுக்கான வகுப்பு: ராகவ் நி தன், 4 வது தெரு, கூடல்நகர், நடத் பவர்: காந்தி மியூசியம் கல்வி அலு லர் நடராஜன், இரவு 7:45 மணி.
முத்தமிழ் முற்றம்: சிறுகதை இல

# தமிழ்க்கூடல் நிகழ்வு

மதுரை, ஆக.22– மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்க்கூடல் நிகழ்வு நடந்தது. ஆய்வுவள மையர் ஜான்சி ராணி வரவேற்றார். சங்க இயக்குநர் பர்வீன் சுல்தானா தலைமை வகித்தார். சேர்மத்தாய் வாசன் கல்லூரி முதல்வர் கவிதா முன்னிலை வகித்தார். எழுத்தாளர் ஆர்னிகா நாசர் பேசினார். ஆய்வறிஞர் சோமசுந்தரி நன்றி கூறினார்.

'பெல்ஜியத்தின் தமிழும் தமிழரும்' என்ற தலைப்பில் பெல்ஜிய தமிழ்ச் சங்கத்தின் துணைச் செயலாளர் கிருஷ்ணகுமார் சோலைராஜ் பேசி

தினமணி

# 'நம்மை மேம்படுத்தும் ஆயுதம் புத்தகம்'



22.08.2025

நாடார் மகாஜன சங்கம்

சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி – மதுரை -12

தமிழ்த்துறை –முத்தமிழ் மன்றம் -2025-2026

வணக்கம். எம் கல்லூாயில் தமிழ்த்துறையும் மதுரை உலகத் தமிழ் சங்கமும் இணைந்து நடத்திய **தமிழ்க்கூடல் -174** வது நிகழ்வு, **நானும் பாவனை விஞ்ஞானக் கதைகளும்** என்னும் தலைப்பில், 21.08.2025 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் உலகத்தமிழ்ச்சங்கக் கூட்ட அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் உலகத்தமிழ்ச் சங்கத்தின் ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி வரவேற்புரை வழங்கினார். எமது கல்லூரியின் முதல்வர் **திருமதி.மோ.கவிதா** அம்மா அவர்கள் இந்நிகழ்வில் முன்னிலை வகித்து தமிழ் விஞ்ஞானம் என்பது நாம் அன்றாடம் கடைபிடிக்கக் கூடியது, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் விஞ்ஞான கருத்துகள் இனிமையாகவும் எளிமையாகவும் புரியும் வகையில் உள்ளது.” என்று முன்னிலையுரை வழங்கினார். மேலும், உலகத்தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் மற்றும் **இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா** அவர்கள் “கதைகள் மனித மனங்களை பூக்க வைக்கக்கூடியவை என்றும் கற்பனைத்திறன் என்பது அறிவுத்திறனை விட மேலானது என்றும் கற்பனை தான் எல்லா விஞ்ஞானத்திற்கும் அடித்தளம்” என்று தலைமையுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர் **திரு.ஆர்னிகா நாசர்** அவர்கள் **“நானும் பாவனை விஞ்ஞானக்கதைகளும்”** என்னும் தலைப்பில், சிறுகதை குறித்து பேசுகையில் “சிறுகதை என்பது, தேர்ந்தெடுத்த சொற்களில் கூறும் 'புதிர்' என்றும் எழுத்தாளர் என்னும் தேன்களில் ஒரு கரண்டி கொம்புத் தேன் என்றும் கவிதையின் பெரிய ‘மகான்’ என்றும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் எல்லாம் கடுமையாக உழைக்கக் கூடியவர்களுக்கு கடவுள் தந்த பரிசு என்றும் கூறியதோடு,சாத்தியம் இல்லாததை சாத்தியமாக்கும் எழுத்துத் தவம் பாவனை விஞ்ஞானக் கதைகள் என்று சிறப்புக் கூடலுரை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு உலகத்தமிழ்ச்சங்கத்தின் ஆய்வு வளமையர் முனைவர் **ஜ.ஜான்சி ராணி** அவர்கள் நன்றியுரை வழங்கினார். மேலும் முற்பகல் 11.00 மணியளவில் உலகத் தமிழ் சங்கக் கலையரங்கக் கூடத்தில் **'பெல்ஜியத்தின் தமிழும் தமிழரும்'** என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக பெல்ஜியத்தின் துணைச்செயலாளர் **கிருஷ்ணக்குமார் சோலைராஜ்** கலந்து கொண்டு பெல்ஜிய தமிழ் சங்கம் தோன்றிய முதல் அவற்றின் பல்வேறு வகையான செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். எமது கல்லூரியின் முதல்வர் **திருமதி.மோ.கவிதா** அம்மா அவர்கள் இந்நிகழ்வில் முன்னிலை வகித்து முன்னிலையுரை வழங்கினார். உலகத்தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் மற்றும் இயக்குநர் முனைவர் **இ.சா.பர்வீன் சுல்தானா** அவர்கள் உலகமெங்கும் உள்ள தமிழ் அமைப்புகளுக்கும் இணைக்கும் பாலமாக உலகத்தமிழ்ச் சங்கம் செயல்படுகிறது என்று தலைமையுரை வழங்கினார். இந்நிகழ்வுகளில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என 100 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

K. P... (signature)

தமிழ்துறைத்தலைவர்

(signature)

முதல்வர்